## பாடம் 2 : **கல்வி**

**வகுப்பு** : V

**பாடம்** : **தமிழ்**

## செய்யுள் : மூதுரை

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. என்றெண்ணி என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

அ)என் + றெண்ணி　　**ஆ) என்று +எண்ணி**

இ)என்றெ + எண்ணி　　ஈ) என்று + றெண்ணி

2. மடை + தலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) மடைதலை　　**ஆ) மடைத்தலை**

இ )மடத்தலை　　ஈ) மடதலை

3. வரும் + அளவும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ) வருமளவும்**　　ஆ)வருஅளவும்

இ)வரும்மளவும்　　ஈ) வரும்அளவும்

4. அறிவிலர் என்பதன் எதிர்ச்சொல்

அ)அறிவில்லாதவர்　　ஆ) படிக்காதவர்

இ)அறியாதார்　　**ஈ) அறிவுடையார்**

5, எண்ணுதல் - இச்சொல்லுக்குரிய பொருள்

அ) வாடுதல்　　ஆ) வருந்துதல்

இ) நனைத்தல்　　**ஈ) நினைத்தல்**

**ஆ. இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

வருமளவும், அடக்கம், மடைத்தலை.

இருக்குமாம், கடக்க, உடையார்.

**இ.'மடைத்தலை' இச்சொல்லில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

மடை, தலை, மலை, தடை, மதலை

AAMS KOSAVAPATTY

**ஈ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1.உறுமீன் | - | பெரிய மீன் |
| 2.கருதவும் | - | நினைக்கவும் |
| 3.அறிவிலர் | - | அறிவு இல்லாதவர் |
| 4.மடைத்தலை | - | நீர் பாயும் வழி |
| 5.அடக்கம் | - | பணிவு |

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?**

கொக்கு தனக்கு இரையாகக் கூடிய பெரிய மீன்கள் வரும் வரை அசைவின்றிக் காத்திருக்கின்றது.

**2. யாரை அறிவில்லாதவராக எண்ணக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?**

தமக்குரிய காலம் வரும் வரை சிலர் அடங்கி இருப்பர். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணிவிடக்கூடாது.

**ஊ. சிந்தனை வினா**

**1. அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது ஏன்? கலந்துரையாடுக**

மாணவர் 1: வணக்கம்! அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது.

மாணவர் 2: ஆம். சரியாகக் கூறினாய். அடக்கமாக இருப்பவர்கள் தனக்கு தகுந்த நேரம் வரும் வரை பொறுமையாக இருப்பர்.

AAMS KOSAVAPATTY

மாணவர் 3: தனக்கு ஏற்ற நேரம் வந்தவுடன் விரைவாகச் செயலை முடித்து வெற்றி பெற்று விடுவார்கள். ஆதலால் அடக்கமானவரை அறிவில்லாதவராக எண்ணுதல் கூடாது.

## உரைநடை : கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இம்மை என்ற சொல் குறிக்கும் பொருள்

   **அ) இப்பிறப்பு** ஆ)மறுபிறப்பு இ) பிறப்பு ஈ)முற்பிறப்பு

2. காரணமாகின்றது என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

   அ) காரண+மாகின்றது ஆ)காரண+ஆகின்றது

   இ)காரணம் + மாகின்றது **ஈ) காரணம் + ஆகின்றது**

3. வறுமை இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

   **அ) செழுமை** ஆ)இன்மை இ) செம்மை ஈ) ஏழைமை

4. பொருள் + செல்வம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) பொருள்செல்வம் ஆ) பொருள்ச்செல்வம்

   **இ) பொருட்செல்வம்** ஈ) பொருட்ச்செல்வம்

5. பொருள்+ இல்லார்க்கு என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   **அ) பொருளில்லார்க்கு** ஆ) பொருள்ளில்லார்க்கு

   இ) பொருலில்லார்க்கு ஈ) பொருள்இல்லார்க்கு

### ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக

1. பழைமை + மொழி = பழமொழி

2, நன்மை + வழி = நல்வழி

### இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. பணமென்றால் = பணம்+ என்றால்

AAMSKOSAVAPATTY

2. தொலைக்காட்சி = தொலை+காட்சி

**ஈ. தொடரை முழுமை ஆக்குக (பத்தும், வளம், கல்வி)**

1. பசி வந்திடப் **பத்தும்** போகும்.
2. கேடில் விழுச்செல்வம் **கல்வி**
3. பொருளால் நம் வாழ்வு **வளம்** பெறும்.

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. களர்நிலத்துக்கு ஒப்பாவர்-யார்?**

கல்வி கற்காதவரே களர்நிலத்துக்கு ஒப்பாவர் ஆவர்.

**2. கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியது எது?**

பொருட்செல்வம் கள்வரால் (திருடரால்) கவர்ந்து செல்லக்கூடியது ஆகும்.

**3. கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம் என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் எழுதுக.**

கற்காதவன் பயன்படாத நிலம் போன்றவன்.

கல்வி கற்றவருக்கு மட்டுமே மதிப்பு கிடைக்கும்.

பொருட்செல்வம் கொடுத்தால் குறையும், திருடரும் திருடுவர். ஆனால் கல்வி குறையாது. திருடவும் முடியாது.

இப்பிறப்புக்கும் மறுபிறப்புக்கும் பயன் தருவது கல்வியே. ஆகவே ‘கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்’ என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்கள் ஆகும்.

AAMS KOSAVAPATTY

**4. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.**

வள்ளுவர் பொருள் இல்லாதவருக்கும் இவ்வுலகம் இல்லை என்கிறார்.

கல்வி கற்பதற்கு பணம் தேவை.

பணம் இல்லாதவன் பிணம் ஆகியவை பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்கள் ஆகும்.

## உ. சிந்தனை வினாக்கள்

**1. கல்விச் செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்றுதான் உனக்கு வழங்கப்படும் எனில், நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?**

நான் கல்விச் செல்வத்தைத் தான் வாங்குவேன். ஏன் என்றால், கல்வியால் பொருட்செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

**2. 'நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி' இதைப் பற்றி உன் சொந்த நடையில் பேசு.**

வணக்கம்! 'நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி' என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் பேசுகின்றேன். மனிதன் தனது வாழ்க்கை முழுவதும் செய்ய வேண்டிய ஒன்று உண்டு என்றால் அது கல்வி கற்பது ஒன்றுதான். இளமை முதல் இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும் ஒருவனால் கல்வியில் முழுமை அடைய முடியாது. எனவேதான் 'கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு' என்னும் தொடர் மக்களிடையே நிலவுகிறது.

AAMS KOSAVAPATTY

## துணைப்பாடம்: வறுமையிலும் நேர்மை

### அ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. பசியால் வாடிய ஊர்மக்களுக்குப் பணக்காரர் எவ்வாறு உதவினார்?**

பஞ்சம் காரணமாக ஊரில் உள்ளவர்கள் நல்ல உள்ளம் படைத்த ஒருவரிடம் பசியால் வாடும் தங்கள் குழந்தைகளுக்கு உதவும்படி வேண்டினர்.

ஊரில் பசியால் குழந்தைகள் யாரும் வாடக்கூடாது என்பதற்காகப் பணக்காரர், ஆளுக்கு ஒரு கொழுக்கட்டை கிடைக்குமாறு தன் வீட்டிற்கு வெளியே தினமும் கூடையில் தேவையான அளவு கொழுக்கட்டைகள் வைத்தார்.

**2. சிறுமியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?**

கொழுக்கட்டைக் கூடையில் இருந்து இறுதியாக என்ன கிடைக்கின்றதோ அதைத்தான் தினமும் சிறுமி இளவேனில் எடுப்பாள். ஆறாம் நாள் வழக்கமான கொழுக்கட்டையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

அந்தக் கொழுக்கட்டைக்குள் தங்கக்காசு இருந்தது. அதைத் தன் அம்மாவிடம் கொடுத்தாள்.

அம்மா அவளிடம் கொழுக்கட்டையைக் கொடுத்தவர்களிடம் கொண்டு போய் தங்கக்காசைக் கொடுத்து விடு என்றாள்.

அந்தத் தங்கக்காசை எடுத்துக் கொண்டு பணக்காரரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. “ஐயா! நான் எடுத்துச் சென்ற கொழுக்கட்டைக்குள் இந்தத் தங்கக் காசு இருந்தது பெற்றுக் கொள்ளுங்கள்” என்றாள்.

AAMS KOSAVAPATTY

பணக்காரர் மகளே, உன் பொறுமைக்கும் நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக்காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்" என்றார் பணக்காரர்.

## ஆ. சிந்தனை வினாக்கள்

**1. 'வறுமையிலும் நேர்மை' என்னும் கதையில், சிறுமியின் இடத்தில் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?**

'வறுமையிலும் நேர்மை' என்னும் கதையில் சிறுமியின் இடத்தில் நான் இருந்தால், சிறுமி இளவேனில் போல தங்கக்காசைப் பணக்காரரிடமே கொடுத்திருப்பேன்.

## மதிப்பீடு

**அ. கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என வகைப்படுத்துக. (பாடினாள், வருணன், எழுதினான், வரைந்தாள், இசைவாணி, உண்டான், கண்ணன், சம்சுதீன், ஜெனிபர், கட்டினார், ஓடியது, முயல்)**

| வ.எண் | பெயர்ச் சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| 1 | வருணன் | உண்டான் |
| 2 | இசைவாணி | எழுதினான் |
| 3 | கண்ணன் | வரைந்தாள் |
| 4 | சம்சுதீன் | கட்டினார் |
| 5 | ஜெனிபர் | பாடினாள் |
| 6 | முயல் | ஓடியது |

AAMSKOSAVAPATTY

**ஆ. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொல்லை எடுத்து எழுதுக.**

1. மயில் தோகையை விரித்து ஆடியது.
2. வாணி கட்டுரை எழுதினாள்.
3. இளம்பிறை உணவு சமைத்தாள்.
4. ஆதிரை மரக்கன்றை நட்டாள்.
5. கொத்தனார் வீடு கட்டினார்.

| பெயர்ச்சொற்கள் | வினைச்சொற்கள் |
|---|---|
| 1. மயில் | 1. ஆடியது |
| 2. வாணி | 2. எழுதினாள் |
| 3. இளம்பிறை | 3. சமைத்தாள் |
| 4. ஆதிரை | 4. நட்டாள் |
| 5. கொத்தனார் | 5. கட்டினார் |

**இ. கதையில் வரும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் பட்டியலிடுக.**

காட்டில் புலி ஒன்று மானை வேட்டையாடத் துரத்தியது. மான் தன்னுயிரைக் காத்துக் கொள்ள வேகமாக ஓடியது. மானைத் துரத்திச் செல்லும்போது, வேடன் விரித்திருந்த வலையில் புலி சிக்கிக் கொண்டது. வேடன் வலையில் சிக்கிய புலியைக் கூண்டில் அடைக்க முயன்றான். அப்பொழுது புலி வேடனைப் பார்த்து, என்னைக் கூண்டில் அடைக்காதே விட்டுவிடு. நான் ஓடிப் போய்விடுகிறேன் என்று கெஞ்சியது. அதற்கு வேடன். 'அதெல்லாம் முடியாது' என்று கூறினான்.

AAMS KOSAVAPATTY

உனக்கு இரக்கமே இல்லையா? என்னை ஏன் துன்புறுத்துகிறாய்? எனக் கேட்டது புலி. அதற்கு வேடன் நீ ஏன் மானை துரத்தினாய்? உனக்கு ஒரு நீதி. எனக்கு ஒரு நீதியா? எனக் கேட்டான். புலி அமைதியாய் இருந்தது.

| வ.எண் | பெயர்ச்சொற்கள் | வினைச்சொற்கள் |
|---|---|---|
| 1 | புலி | துரத்தியது |
| 2 | மான் | ஓடியது |
| 3 | வேடன் | கொண்டது |
| 4 | நான் | முயன்றான் |
| 5 | என்னை | பார்த்து, கெஞ்சியது |
| 6 | உனக்கு | கூறினான், கேட்டது |
| 7 | எனக்கு | துரத்தினாய், கேட்டான் |
| 8 | காட்டில் | இருந்தது |

AAMS KOSAVAPATTY

## மொழியை ஆள்வோம்

**அ. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. முன்னேற்றம் - தொழில்துறையில் நம் நாடு முன்னேற்றம் அடைந்தது.
2. புதுமை - புதுமையான நூல்களை கற்க வேண்டும்.
3. வாழ்க்கை - வாழ்க்கையில் இன்பம் துன்பம் நிறைந்திருக்கும்.
4. தொலைக்காட்சி - நான் மாலையில் தொலைக்காட்சி பார்ப்பேன்.

**ஆ. கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தித் தொடர்களாக எழுதுக.**

1. கண்கள் நாட்டின் பெண்கள் - பெண்கள் நாட்டின் கண்கள்

2. முதுகெலும்பு நாட்டின் விவசாயமே - விவசாயமே நாட்டின் முதுகெலும்பு

3. தரும் உழைப்பே உயர்வு - உழைப்பே உயர்வு தரும்.

4. போன்றது பொன் காலம் - காலம் பொன் போன்றது.

5. துளி வெள்ளம் பெரு சிறு - சிறு துளி பெரு வெள்ளம்.

**இ. கவிதையை நிறைவு செய்க.**

எல்லாம் தரும் கல்வி- வாழ்வில்
ஏற்றம் தரும் கல்வி
கற்றார் நிலை உயர்த்தும் - அறிவில்
ஏற்றம் தரும் கல்வி.
**வாழ்க்கையை மேம்படுத்துவது கல்வி - வாழ்வில்**
**ஏற்றம் தரும் கல்வி.**

**ஈ. குறிப்புகளைப் பயன்படுத்தி கதை எழுதுக. பொருத்தமான தலைப்பைத் தருக.**

நான்கு வணிகர்கள் - பஞ்சு விற்றல் - எலித்தொல்லையால் பூனை வாங்குதல் - பூனையின் ஒவ்வொரு காலையும் ஒருவர் பாதுகாத்தல் - தண்டை - கொலுசு அணிவித்தல் - பூனையின் காலில் புண் ஏற்படுதல் - அந்தக் காலுக்குரிய வணிகன், புண் ஏற்பட்ட காலில் எண்ணெய் தோய்ந்த துணியைச் சுற்றிவைத்தல் - பூனை அடுப்பில் அருகில் செல்லல் - எண்ணெய் தோய்ந்த துணியில் தீப்பற்றுதல் - பூனை பஞ்சு மூட்டைகளின் மீது ஓடுதல் - மூட்டையில் தீப்பற்றுதல் - மற்ற மூவரும் வழக்கு தொடுத்தல் - நீதிபதி தீர்ப்பு வழங்கல் - அடிப்பட்ட காலால் பூனை எப்படி ஓடும் எனக் கேட்டல் மற்ற மூன்று கால்களின் துணையின்றி

AAMS KOSAVAPATTY

ஓட இயலாது எனக் கூறல் - மற்ற மூவரும் நட்டஈடு கொடுக்க வேண்டும் என வலியுறுத்தல்.

விடை:

ஓர் ஊரில் நான்கு வணிகர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பஞ்சு விற்றனர். எலித் தொல்லையால் பூனை ஒன்றை வாங்கினர். பூனையின் ஒவ்வொரு காலையும் ஒருவர் பாதுக்க வேண்டும் என்பது நிபந்தனை. பூனையின் காலில் தண்டை மற்றும் கொலுசை அணிவிக்கின்றனர். அதனால் பூனையின் காலில் புண் ஏற்படுகின்றது.

அந்தக் காலுக்குரிய வணிகன், புண் ஏற்பட காலில் எண்ணெய் தோய்ந்த துணியில் கட்டுப் போடுகின்றான். பூனை அடுப்பின் அருகில் செல்கிறது. எண்ணெய் தோய்ந்து துணியில் தீப்பற்றுகிறது.

பூனை பஞ்சு மூட்டையின் மீது ஏறி ஓடுகிறது. பஞ்சு மூட்டை தீப்பற்றி எரிகிறது. பூனை பஞ்சு மூட்டை எரிந்ததால், மற்ற மூவரும் வழக்கு தொடுக்கின்றனர்.

நீதிபதி நால்வரையும் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றார். அடிபட்ட காலால் பூனை எப்படி ஓடும் என்றும், மற்ற மூன்று கால்களின் துணையின்றி ஓட இயலாது. எனவே, மற்ற மூவரும் தான் நட்ட ஈடு கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு கூறினார்.

தலைப்பு: நல்ல தீர்ப்பு

AAMS KOSAVAPATTY

## உ. மாலை உருவாக்கு

மாறுமா கைரேகை மாறுமா

மோரு தாரு மோ

வா கற்க வா

மாடு சாடு மா

சேர அரசே

தோடு ஆடுதே

மேக ராகமே

மேள தாளமே




## ஊ. மீன்பிடிப்போம் வாருங்கள்


கொக்குக்கு ஏற்ற மீன்களைப் பிடித்து கூடையில் போடுக (ஒரு பொருள் பல சொல்)




1. நெருப்பு - அனல், தணல், கனல், தீ
2. கதிரவன் - பரிதி, சூரியன், ஆதவன், பகலவன்
3. சந்திரன் - அம்புலி, மதி, நிலா, திங்கள்

## எ. சொல் ஏணி அமைப்போம்

சொல்லின் இறுதியில் முடியும் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு அமையும் மற்றொரு சொல்லை எழுதிச் சொல்லேணி அமைக்க.




விளக்கு - குருவி - வித்து - துளசி - சிறகு - கும்மி - மிளகு

அம்மி - மிளகு - குருவி - விதை - தைத்து - துவை - வைகை

வைகாசி - சிவகாசி - சிரிப்பு - புரவி - விறகு - குவி - விழி

## ஏ. வருணிப்போம்.



படத்தைப் பார்த்து வருணனைச் சொல்லுடன் படத்தில் காணும் உயிரினங்களின் பெயரை எழுதுக.



எ.கா - வண்ணம் வண்ண மலர்கள் தாவி ஓடும் முயல்.

1. உயர உயரப் பறக்கும் பறவை.
2. வண்ண வண்ண நிறமாய்ப் பட்டாம்பூச்சி
3. தந்திரம் செய்யவே காத்திருக்கும் நரி.
4. தத்தி ஓடும் புள்ளி மான்.
5. பச்சைப் புல்மேயும் கலைமான்.

ATTY

## ஐ. பயணத்தில் ஒருநாள்

**படங்களுக்குரிய சொற்களை எழுதிப் பத்தியை முழுமையாக்குக**

அப்துல் பக்கத்து ஊரில் இருக்கும்  வீட்டிற்குத் தன் அம்மாவுடன்  சென்றான்.  இருந்து பயணச் சீட்டுகளை அம்மா பெற்றுக் கொண்டார். அப்துல்  ஓரத்தில் அமர்ந்து கொண்டு வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தான். பேருந்து வேகமாகச் சென்றது.  எல்லாம் ஒவ்வொன்றாகப் பின்னோக்கி ஓடுவதுபோல் இருந்ததைக் கண்டு வியப்படைந்து தன் அம்மாவையும் பார்க்கச் சொன்னான். வெளியே தூரத்தில் தெரிந்த  காட்சி  குளிர்ச்சியைத் தந்தது. மலையிலிருந்து துள்ளலோடு விழுந்து பாய்கின்ற  யின் வேகம் அப்துலின் உள்ளத்தையும் துள்ளிக் குதிக்கச் செய்தது. பச்சைப் பசேலென இருந்த செடிகளும்  பார்ப்பதற்குப் பட்டுக் கம்பளம் விரித்தாற் போன்று மிகவும் அழகாக இருந்தன. வயலின் நடுவே  நிறுத்தப்பட்டிருந்தது, பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. சற்றுத் தூரம் சென்றதும் அதிகமாகப் புகையை வெளியேற்றும்  யைக் கண்டான். அதைப் பற்றித் தன் அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அருகில் புல்வெளியில்  மேய்ந்து கொண்டிருந்தது. அப்துல் இதைப் பார்த்துக் கொண்டு வரும்போது யாரோ ஒருவர், தாம் செல்லும் பேருந்தை விரைவாகத் தம்  யில் முந்திச் செல்வதைக் கண்டு பதற்றமடைந்தான். தன் அம்மாவிடம் அதுபற்றிக் கேட்ட போது, அவ்வாறு வண்டியை முந்திச் செல்வது தவறு என்று கூறினார். தாங்கள் இறங்க வேண்டிய ஊர் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கி மகிழ்ச்சியோடு பாட்டி  குச் சென்றான்.

அப்துல் பக்கத்து ஊரில் இருக்கும் பாட்டி வீட்டிற்குத் தன் அம்மாவுடன் பேருந்தில் சென்றான் . நடத்துனரிடம் இருந்து பயணச்சீட்டுகளை அம்மா பெற்றுக் கொண்டார்.

அப்துல் சன்னல் ஓரத்தில் அமர்ந்து கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான் . பேருந்து வேகமாகச் சென்றது . மரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகப் பின்னோக்கி ஓடுவது போல் இருந்ததைக் கண்டு வியப்படைந்து தன் அம்மாவையும் பார்க்கச் சொன்னான் . வெளியில் தூரத்தில் தெரிந்த இ யற்கைக் காட்சி கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தந்தது.

மாலையிலிருந்து துள்ளலோடு விழுந்து பாய்கின்ற அருவியின் வேகம் அப்துலின் உள்ளத்தையும் துள்ளிக் குதிக்கச் செய்தது . பச்சைப்பசேலென இருந்த செடிகளும் வயல்களும் பார்ப்பதற்குப் பட்டுக் கம்பளம் விரித்தாற் போன்று மிகவும் அழகாக இருந்தன.

வயலின் நடுவே சோளக் கொல்லை பொம்மை நிறுத்தப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது . சற்றுத்தூரம் சென்றதும் அதிகமாகப் புகை வெளியேற்றும் தொழிற்சாலையைக் கண்டான். அதைப் பற்றித் தன் அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அருகில் பு ல்வெளியில் ஆடு மேய்ந்து கொண்டிருந்தது . அப்துல் இதைப் பார்த்துக் கொண்டு வரும்போது யாரோ ஒருவர் தான் செல்லும் பேருந்தை வேகமாகத் தன் குதியுந்தில் முந்திச் செல்வதைக் கண்டு பதற்றமடைந்தான்.

தன் அம்மாவிடம் அது பற்றிக் கேட்ட போது அவ்வாறு வாகனத்தை முந்திச் செல்வது தவறு என்று கூறினார் . தாங்கள் இறங்க வேண்டிய ஊர் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கி மகிழ்ச்சியோடு பாட்டி வீட்டிற்குச் சென்றான்.

AAMSKOSAVAPATTY